விடப்பட்டு இதுவரை 19 ஆயிரம் தெரு விளக்குகளுக்கு மின் இணைப்பு தரப்பட்டிருக்கிறது. இப்போது அதிகமான கோரிக்கைகள் வந்திருக்கின்ற காரணத்தால் மேலும் 7000 தெரு விளக்குகளுக்கு தரப்பட வேண்டுமென்று உத்தரவு இடப்பட்டிருக்கிறது. மின் இணைப்பு இல்லாத கிராமங்கள் பற்றி குறிப்பாக கவனத்திற்குக் கொண்டு வந்தால் நிச்சயமாக மின் இணைப்பு தரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(10-20)

திரு. பெ. சீனிவாசன் : தலைவர் அவர்களே, புறம்போக்குப் பகுதிகளில் இருக்கின்ற குடிசைகளுக்கு மின் இணைப்பு தருவதிலே தாசில்தாருடைய 'நோ அப்ஜக்ஷன் சர்ட்டிபிகேட்' வாங்குவதிலே மெத்த சிரமம் இருக்கிறது. எப்படி இருந்தாலும் அதை வாங்க முடியாது. பத்திரம் பதிகிற இடத்திலே யார் வாங்குகிறார்கள், யார் விற்கிறார்கள் என்பதைப் பற்றி மட்டுமே கவலைப்படுகிறார்களே தவிர வேறு எதைப்பற்றியும் கவலைப் படுவதில்லை. எனவே அதுபோல் மின்சார இலாகாவிடம் மின் னிணைப்பு கேட்டால் இணைப்பு கொடுக்கக்கூடிய அளவுக்கு அந்தக் குடிசை பாதுகாப்பாக இருந்தால் கொடுக்கலாம். எனவே தாசில்தாருக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லாத அளவுக்கு உத்தரவு வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வருவாய்த்துறை அமைச்சர் அவர்களிடம் இந்தக் கேள்வியைக் கேட்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை பூங்கா நகர் தொகுதியில் குடிசை மாற்று வாரிய வீடுகளைப் பழுதுபார்த்தல்.

*1001. திரு. அ. ரகுமான்கான் :

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சென்னை பூங்கா நகர் தொகுதியில் உள்ள கல்யாணபுரம், பார்வதி கக்கன் காலனி, பெரியார் நகர், கேசவப்பிள்ளை பார்க் ஆகிய இடங்களில் உள்ள குடிசை மாற்று வாரிய வீடுகள் பல பழுது அடைந்திருப்பதாலும், படிகட்டுக்கள் கழிப்பறைகள் இடிந்து இருப்பதாலும் மீண்டும் புதுப்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

1989 நவம்பர் 1]

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சென்னை பூங்கா நகர்த் தொகுதியிலுள்ள கல்யாணபுரம், பார்வதி கக்கன் காலனி, பெரியார் நகர், கேசவபிள்ளை பார்க் ஆகிய இடங்களில் உள்ள குடிசை மாற்று வாரிய குடியிருப்புகளைச் சீர்படுத்துவதற்காக ரூ. 9.2 இலட்சம் மதிப்பீட்டில் திட்டம் தயார் செய்யப்பட்டு, இந்தத் திட்டம் தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இந்த மாத இறுதிக்குள் இந்தப் பணி முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ. இரகுமான்கான்: பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை, பூங்கா நகர் பகுதியில் உள்ள கல்யாணபுரம், பார்வதி கக்கன் காலனி, பெரியார் நகர், கேசவப்பிள்ளை பார்க் ஆகிய பகுதிகளில் கழிப்பிட வசதி செய்யவும், கழிவுநீர் அகற்றவும், குப்பைகளை அகற்றவும், மின் வசதி செய்யவும், குடிநீர் வசதி செய்யவும் அரசு நடவடிக்கை எடுத்திருப்பதாகவும், பணம் செலவு செய்திருப்பதாகவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். இந்த மாத இறுதிக்குள்ளாக அது முற்றுப்பெறும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்காக அரசுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் அதே நேரத்தில் இந்தப் பகுதியிலே வருகிற ஜகநாதபுரம் என்ற பகுதியிலே குடிசைப்பகுதி மக்கள் வாழ்கிறார்கள். நீண்ட காலமாக அவர்களுக்குப் பட்டா கொடுக்க வேண்டும் என்று கோரிக்கை இருக்கிறது. உடனடியாக நம்முடைய அமைச்சர் அவர்கள் முதலமைச்சரோடு கலந்து பேசி அது சம்பந்தமான கோப்புகளை வரவழைத்து பட்டா வழங்குவதற்கு ஏற்பாடு செய்வார்களா என்பதையும் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். அத்தோடு இன்னொன்றையும் நான் கேட்க விரும்புகிறேன். அதைப்போலவே பெரியார் நகர், காந்தி நகர், ஆகியவை சென்னை, பூங்கா நகர்ப் பகுதியிலே இருக்கின்றன. ஏற்கனவே அங்கே குடிசைவாழ் மக்கள் வாழ்கிறார்கள். அவர்களுக்கும் பட்டா வழங்குவதற்கு எம்.எம்.டி.ஏ. ஏற்கெனவே நிலத்தை ஆய்வு செய்துவிட்டுப் போய்விட்டார்கள். எனவே பட்டா வழங்குவதில் தயக்கம் இல்லை. இது சம்பந்தமாகவும் அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர்களுடைய அரிய கருத்து நிச்சய மாக பரிசீலனை செய்யப்படும்.

திரு. மு. க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூங்கா நகர்த் தொகுதி மாத்திரமல்ல. சென்னையில் உள்ள பல்வேறு தொகுதிகளில் உள்ள குடிசைமாற்று வாரிய வீடுகள் பழுதடைந்திருக்கின்றன. நானும் குடிசை மாற்று வாரியத்தின் ஆலோசனைக் குழுவில் உறுப்பினராக இருக் கிறேன். அமைச்சரிடத்திலும், வாரியத் தலைவரிடமும் பல முறை பழுதுபார்க்கிற பிரச்சினை பற்றி எடுத்துச் சொல்கிற போது நிதியாதாரம் போதவில்லை என்று எங்களுக்குப் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, அரசினுடைய கவனத்திற்கு இதை எடுத்துச் சொல்லி இதற்கான நிதி யாதாரத்தைப் பெருக்குகிற முயற்சிகளில் நமது அமைச்சர் அவர்கள் ஈடுபடுவார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய அரிய கருத்து நிச்சயமாகப் பரிசீலனை செய்யப்படும். இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்டவுடன்—பல ஆண்டுக்காலமாக பரா மரிப்பு செய்யப்படாமலே இருந்த பழுதடைந்த கட்டிடங்களை எல்லாம்—105 குடியிருப்புகள் பழுதடைந்திருப்பதாகக் கணக் கிடப்பட்டு, ஒட்டுமொத்தமாக ஒரு கோடியே அறுபத்தைந்து இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சீர்படுத்துகிற பணி தொடரப்பட்டு இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

நிதியாதாரத்தைப் பொறுத்தவரையில் மத்திய அரசு, குடிசை மேம்பாட்டுப் பணிக்காக பம்பாய், கல்கத்தா போன்ற நகரங்களுக்கு தலா 50 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளது. ஆனால் தமிழகத்தில் சென்னையில் மட்டும் 1417 குடிசைப் பகுதிகள் இன்றையதினம் இருக்கின்றன. இந்தப் பகுதிகளுக்கு—எந்த நிதியும் ஒதுக்கீடு செய்யப்படவில்லை. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் முயற்சியால் மதிப்பிற்குரிய திரு. சால்வே அவர்களின் தலைமையில் இயங்குகின்ற நிதிக்குழுவை தமிழகத் திற்கு வரவழைத்து அவர்களை அத்தனை குடிசைப் பகுதி களுக்கும் நேரில் அழைத்துச் சென்று பார்வையிடச் செய்தோம்

1989 நவம்பர் 1]

(10-25)

அவர்கள் ஆவன செய்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். அந்த நிதி இன்னும் கிடைக்க வில்லை. அந்த 50 கோடி ரூபாய் கொடுத்தால் இந்தக் குடிசை மாற்று வாரியத்தில் இன்னும் நல்ல பணிகளைச் செய்ய முடியும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, குடிசையிலே வாழ்கின்ற மக்களுக்கு கோபுரம் போல வீடுகளை அவர்களை அங்கே குடியமர்த்துவதற்காக கட்டிக்கொண்டிருக் கிறோம். மேலும் குடிசைப் பகுதிகளிலே அடிப்படை வசதி களையும் செய்து கொண்டிருக்கிறோம். மேலும் நிதி ஒதுக்கீடு சம்பந்தமாக மாண்புமிகு முதல்வர் அவர்களுடன் கலந்து பேசி விரைவில் நல்ல முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செங்கைசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய பதில் என்னுடைய வயிற்றிலே பால் வார்த்தது போல இருக்கிறது. ஆகவே, இந்த அரசுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு கோடியே 60 லட்சம் ரூபாய்க்கு மேல் குடிசைப் பகுதி களைப் பராமரிப்பதற்காக பணம் ஒதுக்கப்பட்டிருப்பதாக இங்கே அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். என்னுடைய தொகுதியிலே, குறிப்பாக சென்னையிலே நம்முடைய மாண்பு மிகு முதல்வர் கலைஞர் அவர்கள்தான் 1972 ஆம் ஆண்டிலே முதன் முதலாக குடிசை மாற்று வாரியத்தை அமைத்தார்கள். தற்போது டி. எஸ். மூர்த்தி நகர், வியாசர்பாடி போன்ற பகுதி களில் உள்ள குடிசைமாற்று வாரிய வீடுகள் எல்லாம் மோசமான நிலையில் இருக்கின்றன. அவற்றிற்கு எவ்வளவு பணம் ஒதுக் கீடு செய்யப்பட்டிருக்கிறது? அதுவன்னியில் குடிசை மாற்று வாரியமே ஆழ் குழாய் கிணறுகள், குடிநீர் வழங்குகின்ற நிலையங்கள், கழிவு நீர் போக்கு நிலையங்கள் போன்ற பல வற்றை அமைத்திருக்கிறது. அவற்றிலும் மிகவும் மோசமான சூழ்நிலை இருக்கிறது. அவற்றிற்கும் பணம் ஒதுக்கீடு செய்ய வேண்டும். அப்பணிகளையும் ஏற்று செயல்படுத்துகின்ற செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா? மேலும் நிதிநிலை பற்றி . . . (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வியாசர்பாடி பகுதியில் கட்டிடம் பழுது பார்ப்பதற்காக 13.77 லட்சம் ரூபாய் செலவில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அப்பணியும் தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

திரு. எம். அப்துல் லத்தீப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டதற்கு பிறகு புதிதாக சென்னை மாநகரில் எத்தனை இடங்களில் குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக மாடி வீடுகள் கட்டப்படுகின்றன? அதோடு குடியிருப்புக்குப் பட்டா வழங்குகின்ற விஷயத்தில் ஒரு நெறிமுறை காலா காலமாக பின்பற்றப்பட்டு வருகிறது. அதாவது 3 சென்டுக்குக் குறைவாக பட்டா வழங்குவதில்லை என்ற நெறிமுறை இருக்கிறது. ஆனால் குடிசைப் பகுதிகளில் 3 சென்ட் பகுதியிலேயே இரண்டு, மூன்று வீடுகள் இருக்கின்றன. எனவே குடிசைப் பகுதிகளில் பட்டா வழங்குவதைப் பொறுத்தவரையில் புதிய நெறிமுறைகளை வகுத்து அதன் அடிப்படையில் அவர்கள் குடியிருக்கின்ற பகுதிகளை அவர்களுக்கே பட்டா போட்டு வழங்க இந்த அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக புதிதாக 9 கோடியே 32 லட்சம் ரூபாய் செலவில் 2 ஆயிரத்து 664 குடியிருப்புகளை, மாடி வீடுகளைக் கட்டுவதற்கான பணிகள் தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. பட்டா வழங்குகின்ற திட்டத்தின் அடிப்படையில் உறுப்பினரின் கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி எஸ். பி. சற்குணம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிதி பற்றாக் குறையை போக்குவதற்காக முயற்சி எடுத்துக்கொண்டிருப்பதற்காக என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியில் உள்ள அரங்கநாதபுரத்தில் இருக்கின்ற குடிசை மாற்று வாரிய வீடுகள் மிகவும் பழுதடைந்த நிலையில் இருக்கின்றன. குடிநீர் வண்டிகளை அங்கே கொண்டு வருவதற்கு இயலாத சூழ்நிலை இருக்கிறது. அதனால் மக்கள்

மிகவும் சிரமப்படுகிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செலுத்தும் கவனத்தில் ஒரு பகுதியை என்னுடைய பகுதிக்கும் செலுத்த முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதி நிலையைப் பொறுத்து இந்தப் பணிகள் விரைவில் முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சென்னை மாநகரம் முழுவதும் உள்ள குடியிருப்புக்களைப் பழுதுபார்க்க ஒரு கோடியே 65 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பதாகச் சொன்னார்கள். என்னுடைய எழும்பூர் தொகுதியில் உள்ள சந்தோஷ் நகர், எம்.எஸ். நகர் ஆகிய இரண்டு பகுதிகளிலுமுள்ள குடியிருப்புக்களைப் பழுதுபார்க்க எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது? அத்துடன் என்னுடைய தொகுதியிலும் புதிதாக மாடி வீடுகள் கட்டுகின்ற திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீடுகளைப் பழுதுபார்க்கின்ற பணியைப் பொறுத்தவரையில் 2 இடங்களில் 12 வேலைகள் 10 லட்சத்து 63 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. புதிதாக வீடுகள் கட்டுகின்ற வினாவைப் பொறுத்தவரையில் தனி வினா எழுப்ப வேண்டும்.

(10-30)

திரு. சா. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சரவர்கள் சொல்லுகின்ற பதிலிலிருந்து, மத்திய அரசாங்கம் நிதி ஒதுக்கினால்தான் முழுத் திட்டத்தையும் செயற்படுத்த முடியுமென்பது தெரிகிறது. ஆனால் மத்திய அரசு இப்போது உதவி செய்யுமா என்பது சந்தேகத்திற்கிடமான நிலையில் இருக்கின்ற காரணத்தால், மாநில அரசே முன் வந்து, மேலும் நிதியை ஒதுக்கி, குடிசைப் பகுதிகளைச் சீர்படுத்த முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதி நிலைமை சம்பந்தமாக மாண்புமிகு முதல்வரவர்களுடன் பேசி, நல்ல முடிவுகள் விரைவில் எடுக்கப்படும்.

[1989 நவம்பர் 1

திரு. என். கணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 13 ஆண்டுகளாக சரிவரப் பராமரிக்கப் படாமல், குடிசைப் பகுதிகள் எல்லாம் இடிந்து விழக்கூடிய சூழ் நிலை இருப்பதைக் கடந்த ஆலோசனைக் கூட்டத்திலே அமைச்சர் அவர்களிடத்திலே தெரிவித்த காரணத்தால் கூடுதல் நிதியாக ஏறக்குறைய 3 கோடி ரூபாயை அவசரமாக அரசாங்கத் திடமிருந்து பெற்றுத் தருவதாக ஆலோசனைக் குழுவில் அமைச்சர் அவர்கள் வாக்களித்திருக்கிறார்கள். அந்த 3 கோடி ரூபாய் நிதியை, இங்கேயே மாண்புமிகு முதல் அமைச்சர் அவர் களிடத்தில் கலந்து பேசி, உடனடியாகப் பெற்றுத் தர முயற்சி எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தெந்தப் பணிகள் முதலிலே செய்ய வேண்டுமென்பதைக் கண்டறிந்து, அந்த வேலைகளுக்கு முன் னுரிமை கொடுக்கும் வகையில், விரைவில் மாண்புமிகு முதல்வர் அவர்களுடன் பேசி, முடிவுகள் எடுக்கப்படும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் இங்கேயே முதல்வர் அவர்களோடு கலந்து பேசி, நிதிநிலை பற்றி அறிவிப்பாரா என்று கேட்டிருக்கிறார். இங்கே பைனான்ஸ் செக்ரட்டரி வர இயலாது. இந்த இடத் திற்குள்ளே பைனான்ஸ் செக்ரட்டரி வர இயலாது

திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக் கட்டிடங்களைப் பழுது பார்ப்பதற்காக ஒரு குறிப்பிட்ட சதவிகிதத் தொகை ஒவ்வொரு ஆண்டும் ஒதுக்கப் படுவதாக நான் அறிகிறேன். அதுமாதிரியாக குடிசை மாற்று வாரிய வீடுகளைப் பழுது பார்க்க, அதனுடைய மொத்த மதிப் பீட்டிலே இவ்வளவு தொகை என்று ஒவ்வோர் ஆண்டும் ஒதுக் கீடு செய்யும் நடைமுறை இருந்து வருகிறதா? அப்படி இல்லை என்றால், பொதுவாக இந்தக் கட்டிடங்களைப் பழுது பார்ப்பது என்பதை அவ்வப்போது செய்யவில்லையென்றால், பின்னால் அதிகமான தொகை இதற்காகச் செலவாகுமே, எனவே ஒவ் வோர் ஆண்டும் அதற்காக ஒரு தொகையை ஒதுக்கி, அவ்வப் போது வரக்கூடிய பழுதுகளை சரி பார்ப்பதற்கான ஏற்பாடு களை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

[1989 நவம்பர் 1

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, 1970 ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் குடிசை மாற்று வாரியம் உருவாக்கப் பட்டது. இந்த வாரியக் கட்டிடங்கள் பல ஆண்டுக்காலமாக பராமரிப்பு செய்யப் படவில்லை. அங்கொன்றும், இங்கொன்றுமாக சிறுசிறு பணிகள் தான் நடைபெற்றிருக்கின்றன. இந்த அரசு வந்ததற்குப் பிறகு தான் ஒட்டுமொத்தமாகப் பழுது பார்க்கும் பணி மதிப்பீடு செய்யப்பட்டு, இன்றையதினம் ஒரு கோடியே அறுபத்தி ஐந்து இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, இந்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்).

2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எஸ். திருநாவுக்கரசு, திரு. எஸ். டி. உகம்சந்த், திரு. கே. ரமணி, திரு. கோ. வீரையன் ஆகியோர் தமிழகத்தில் அத்தியாவசியப் பொருள்கள் நியாய விலைக் கடைகளில் விநியோக முறை சரியில்லாமையால் அரிசி மற்றும் அத்தியாவசியப் பொருள்களின் விலை ஏற்றம் என்னும் பொருள் குறித்து விவாதிக்க இப்பேரவையின் இன்றைய நடவடிக்கைகளை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டுமென்று அறிவிப்புகள் கொடுத்திருக்கிறார்கள். இப்பொருள் எவ்வாறு அவசரப் பொது முக்கியத் துவம் வாய்ந்தது என்பது குறித்து சுருக்கமாகக் கூறும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

* **திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழகத்தில் கடந்த சில மாதங்களாக ரேஷன் கடைகளிலே இதற்கு முன்னாலே வழங்கப்பட்டதுபோல குடும்ப அட்டைகளுக்கு மாதந்தோறும் அதிகபட்சம் 20 கிலோ அரிசி